தமிழ்நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1974 மார்ச் 4.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 10 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

சிக்கண்ண அரசினர் கலைக் கல்லூரி மாணவர் விடுதி.

*271—வினா : திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி–சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் சிக்கண்ண அரசினர் கலைக் கல்லூரிக்கு மாணவர் விடுதி ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) ரூபாய் ஆறு லட்சம் மதிப்பீட்டுச் செலவில் பல்கலைக் கழக மான்யக் குழுவின் உதவியுடன் விடுதிக் கட்டிடம் கட்டுவதற்கு கல்லூரிக் கல்வி இயக்குநரிடமிருந்து வந்த கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் அரசு ஏற்பு வழங்கப்படும்.

பி.காம்., எம்.காம். பாட வகுப்புகள்.

*272—வினா : திரு. ஜி. ராமசாமி : மாண்புமிகு கல்வி–சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலக் கல்லூரியில் பி.காம்., எம்.காம்., பட்டப் படிப்பு தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

TRUTH ALONE TRIUMPHS

திரு. ஜி. இராமசாமி : தலைவர் அவர்களே, அரசினரால் நடத்தப் படுகிற மாநிலக் கல்லூரி மிகவும் சிறப்பு வாய்ந்த பெரிய கல்லூரியாக இருந்தும், அங்கு பி.காம்., எம்.காம். போன்ற பட்டப் படிப்பு இல்லாதது பெருங் குறையாக இருக்கிறது. இனியாவது அங்கு இவற்றை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த யோசனை கல்லூரி முதல்வரிடத்தில் தெரிவிக்கப்பட்டது. கல்லூரியில் போதுமான இட வசதி இல்லாததால் இப்பொழுது அந்த வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு வழி இல்லை என்றும், புதிய கட்டடம் கட்டப்பட்டால்தான் அது பற்றி யோசிக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

திரு. ஆ. பரந்தாமன் : சென்னைப் பல்கலைக் கழகத்தில் இருக்கின்ற சிண்டிகேட், இனி எந்தக் கல்லூரியிலும் பி.காம்,. எம்.காம். வகுப்புகள் திறக்கக்கூடாது என்று சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது. அது உண்மையானால், பிற கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு இந்த வாய்ப்பு இல்லாமல் போய்விடும் அல்லவா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது பற்றிய தகவல் அரசுக்கு இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, சென்னை மாநிலக் கல்லூரியில் துரிதமாகக் கட்டடம் கட்ட ஏதாவது திட்டம் தீட்டப் பட்டிருக்கிறதா ? ஸயன்ஸ் கோர்ஸ் திறப்பதற்குள்ள அவ்வளவு கஷ்டம் பி.காம்., எம்.காம். கோர்ஸ்களைத் திறப்பதில் இருக்காது. ஆகவே, இருக்கக்கூடிய இடத்திலேயே ஏதாவது அட்ஜெஸ்ட் செய்து, பி.காம்., எம்.காம். கோர்ஸ்களை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது 11 கல்லூரிகளில் இந்தப் படிப்பு சொல்லிக் கொடுக்கப் படுகிறது. ஆனால், மாநிலக் கல்லூரியில் கட்டட வசதி ஏற்பட வேண்டு மென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுபற்றி செயற்குறிப்பு அனுப்பப் பட்டிருக்கிறது. அது அரசின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

திரு. எம். தேவராசன் : உதகை கலைக் கல்லூரியில் பி.காம். வகுப்பு கள் ஆரம்பிக்க வேண்டுமென்று கோரிக்கை வந்துள்ளதா ? அது குறித்து அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி வேண்டும்.

திரு. எஸ். ஆறுமுகம் : மாநிலக் கல்லூரி நம்முடைய நாட்டில் பழம் பெரும் கல்லூரியாகும். அங்கே. பி.காம்., எம்.காம். வகுப்புகள் இல்லாத தால், அவ்வகுப்புகள் இருக்கும் தனியார்க் கல்லூரிகளுக்குப் போய் இடம் கேட்டால் ஒரு 'ஸீட்டுக்கு' ஐயாயிரம், ஆறாயிரம் ரூபாய் 'பில்டிங் ஃபண்டு'க்கு வாங்கிக்கொண்டு 'ஸீட்' கொடுக்கிறார்கள். இதனால், ஏழை

மாணவர்கள் இப் படிப்பை அரசுக் கல்லூரியில் படிக்க வசதிபற்றுப் போகிறது. ஆகவே, இந்த ஆண்டிலிருந்து மாநிலக் கல்லூரியில் இப் படிப்பைத் துவங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். பதினேறு கல்லூரிகளில் இந்தப் படிப்பு சொல்லிக் கொடுக்கப்படுகிறது. மாநிலக் கல்லூரியில் இட வசதி யின்மை காரணமாக அதைத் துவங்குவதற்கில்லை என்று குறிப்பிட்டிருக் கிறார்கள். புதிய கட்டடம் கட்டுவதற்கான செயற் குறிப்பு அவர்களிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அது வந்த பிறகுதான் அது பற்றி முடிவு எடுக்க வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இப்பொழுது பி.ஏ., பி.எஸ்ஸி. படிப்பை விட, பி.காம்., எம்.காம். படிப்பதன் மூலமாக தொழில், வியாபாரம் போன்ற துறைகளுக்கெல்லாம் உதவிகரமாக இருக் கும் என்கின்ற கருத்து அதிகமாகப் பரவிக்கொண்டிருக்கும் காரணத்தால், ஏற்கனவே இருக்கும் கல்லூரிகளில் பி.காம்., எம்.காம். வகுப்புகளுக்கு அதிகமான வீடுகளுக்கு வகை செய்யப்படுவதுடன், மாநிலக் கல்லூரி யிலும், இத்தகைய ஏற்பாட்டுக்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பி.காம்., எம். காம். போன்றவைகளுக்கு அதிகமான சலுகை தந்து, அந்த வகுப்புகளுக்கு வகை செய்யும் முயற்சியினை மேற்கொள்ள வேண்டு மென்றுதான் அரசு பல்கலைக்கழகத்திற்குப் பரிந்துரை செய்திருக்கிறது. கூடுமான வரையில், எந்தெந்தக் கல்லூரியில் இட வசதி இருக்கிறதோ அந்தக் கல்லூரிக்கு அனுமதி வழங்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் மூலமாகப் பல்கலைக்கழகங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is the Government aware of the fact that in some of the private colleges, donors seats are given and they demand Rs. 5,000 per seat in respect of donors who have contributed Rs. 10,000, and may I know what steps the Government have taken if they are aware of that ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ' நன்கொடை ' (டொனேஷன்) வழங்கும்போது நாம் எதையும் செய்ய முடியாது. அதற்கான ' கம்ப்ளெயின்ட் ' என்ற முறையில் யாரும் நம் மிடத்தில் அந்தக் கோரிக்கையை வைக்கவில்லை. அரசாங்கத்தினிடம் வந்து நேரடியாகச் சொல்கிறார்கள். ஆனால், ' டொனேஷன் ' கொடுத்ததாகச் சொல்கிறார்கள். வாங்குபவர்களும் ' டொனேஷன் ' வாங்குவதாகச் சொல்கிறார்கள். ' டொனேஷன் ' வாங்கினாலும் அதையும் கணக்கில் வரவு வைக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்த முடியும். ' கம்ப்ளெயின்ட் ' எழுதிக் கொடுங்கள், நடவடிக்கை எடுக்கிறோம் என்றாலும், கம்ப் ளெயின்ட் எழுதிக் கொடுக்க மறுக்கிறார்கள். எழுதிக் கொடுத்தால், பல்கலைக்கழகத்தின் மூலமாக நாம் நடவடிக்கை எடுப்போம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, முன்பு பி.காம். (ஆனர்ஸ்) இருந்தது. இப்பொழுது அதை மாற்றியிருக்கிறார்கள். அதைத் திரும்பவும் கொண்டுவர அரசாங்கம் வேண்டிய தாக்கீதுகள் நல்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பி.ஏ. (ஆனர்ஸ்), பி.எஸ்ஸி. (ஆனர்ஸ்) இப்பொழுது பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தவில்லை. பி.ஏ.-க்குப் பிறகு எம்.ஏ., பி.எஸ்ஸி.-க்குப் பிறகு எம்.எஸ்ஸி.-க்குப் போக வழி இருக்கிறதைப் போல, பி.காம்.-க்குப் பிறகு எம்.காம். படிப்புக்குத் தான் பல்கலைக் கழகங்கள் வற்புறுத்தி வருகின்றன.

திரு. எம். சுரேந்திரன் : நன்கொடை வழங்குவது சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட வேண்டிய ஒன்று என்பது போல் அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது குறிப்பிட்டார்கள். எல்லோருக்கும் தெரிந்த ஒரு உண்மை, நன்கொடை என்பது இலஞ்சமாகத்தான் கொடுக்கப்படுகிறது என்பது. அப்படியிருக்க, சட்டத்தை மட்டும் பார்த்து, அதற்கு ஒரு நியாயம் கற்பித்து விடுவதன்மூலம் தீமைகளை ஒழித்துவிட முடியாது. அதை ஒழிப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசாங்கம் கவனிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சட்டப்படிதான் நாம் முயலுதல் வேண்டும் ; அல்லது பல்கலைக் கழகத்தின் மூலமாக முயலுதல் வேண்டும். அப்படி வருகின்றபோது சட்டத்தின் மூலமாகத் தப்பித்துக்கொள்கிறார்கள். ஆகவே, கம்ப்ளெயின்ட் எழுதித் தந்தால், அந்தக் கம்ப்ளெயின்டை வைத்து விசாரித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம். கம்ப்ளெயின்ட் சொல்கிறார்களே தவிர, கம்ப்ளெயின்ட் எழுதிக் கொடுப்பதில்லை. எழுதிக் கொடுப்பார்களானால், தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "மாநிலக் கல்லூரியில் பி.காம்., எம்.காம். பட்டப் படிப்பு தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?" என்பது மூலக் கேள்வி. அதையொட்டி துணைக் கேள்விகள் இருக்க வேண்டும். "நன்கொடையைப்" பற்றி துணைக் கேள்வி எழுந்துவிட்டதினால், அதையொட்டியே மற்றத் துணைக் கேள்விகளும் இருந்துவிடக் கூடாது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இட நெருக்கடி காரணமாகத்தான் பி.காம்., எம்.காம். வகுப்புகள் மாநிலக் கல்லூரியில் ஆரம்பிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். இட நெருக்கடி தீரும் வரையில், இரவு நேரப் பட்டப் படிப்பு பி.காம்., எம்.காம். போன்றவற்றிற்கு நடத்த அனுமதிக்குமாறு அரசு பல்கலைக் கழகத்திற்கு ஆலோசனை கூறுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாலை நேரப் படிப்பு என்பது பகுதி நேரப் படிப்பாகும். ஆனால், பகல் நேரத்தில் படிக்கும் மாணவர்களுக்கு இந்த வகுப்புகள் வேண்டும்.

1974 மார்ச் 4]

என்ற கோரிக்கை இருந்து வருகிறது. அதைப் பல்கலைக்கழகம் அனுமதிக்க வேண்டும். இப்பொழுது பல துறைகளில் பட்டப் படிப்பு மாநிலக் கல்லூரியில் அமைந்திருப்பதால், அதிலே இதற்கு இட வசதி போதவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது பற்றிய செயற்குறிப்பை மாநிலக் கல்லூரி முதல்வர் அனுப்பியிருக்கிறார். அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதன்மீது முடிவு எடுத்ததற்குப் பிறகு இந்த வகுப்புகள் துவங்குவது பற்றி யோசிக்கப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, கல்லூரிகள் திறக்கிற நேரத்தில் பிள்ளைகளைச் சேர்ப்பதென்றால், மிகவும் சங்கடப்படுகிறார்கள். தனியார் கல்லூரிகளில் நன்கொடை கேட்கின்ற வழக்கம் ஒன்று இருக்கலாம். இல்லாவிட்டால் அதைச் சட்டப்படி தடுப்பதற்கான காரியங்கள் செய்யப்பட வேண்டும். எதை இந்த அரசு மேற்கொள்ள இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சட்டப்படிதான் நடக்க வேண்டும். அரசினர் கல்லூரியைப் பொறுத்தவரை, அதற்கான விதிகள் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் இருந்து வருகிறது. தனியார் கல்லூரியைப் பொறுத்தவரை, நான் முதலில் குறிப்பிட்டபடி, கம்ப்ளெயின்ட் ஏதாவது கொடுக்கப்பட்டால் தான் விசாரிக்க முடியும். "நன்கொடை" என்று வந்துவிட்டால், அது சட்டத்தை மீறுவதாக ஆவதில்லை. எல்லோரும் சேர்ந்து ஒத்துழைத்தால் நடவடிக்கை எடுக்கலாம். இல்லையென்றால், சட்டத்தினுள்ளே புகுந்து கொள்ளக்கூடிய நிலை வந்துவிடுகிறது. சிலபல கல்லூரிகளில் "நன்கொடை" என்ற பெயரில் பணம் வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுக்க வேண்டுமென்று பல்கலைக்கத்திற்குக்கூட, பலதடவை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். பல்கலைக் கழகத்தினரும் அந்த வகையில் முயன்று வருகிறார்கள்.

திரு. பெ. சௌந்திரபாண்டியன்: தலைவர் அவர்களே, தற்போது பி.காம்., எம்.காம். வகுப்புகளில் சேர்வதற்கு மாணவர்கள் நிறையப் பேர் முன்வருகிறார்கள். இட வசதி உள்ள கல்லூரிகளில் இருக்கின்ற இடத்தைக் கூடுதலாக ஆக்குவதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இடங்கள் ஒதுக்குவதைப் பல்கலைக் கழகங்கள்தான் செய்ய வேண்டும். ஆனால், பல கல்லூரிகளில் இட வசதியைப் பெருக்குகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். சில கல்லூரிகளில் 60–இலிருந்து 75 ஆகவும், 75–இலிருந்து 100 ஆகவும் ஆக்கியிருக்கிறார்கள். பல்கலைக் கழகம் பார்த்து, போதுமான அளவு இடம் இருக்கிறது என்று அவர்களுக்குத் திருப்தி ஏற்படுமானால், பல்கலைக்கழகம் அனுமதி அளிக்கிறது. எங்கெங்கே வாய்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் இட வசதியை அதிகரிக்கச் செய்யுமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இந்த யூனிவர்சிட்டியிலே பி.காம்., எம்.காம். வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு இட வசதியை மட்டும் தகுதியாக வைத்திருக்கிறார்களா? அல்லது என்ன அடிப்படையிலே அனுமதி

அளிக்கிறார்கள் ? அவர்கள் விருப்பப்பட்டால் கொடுக்கலாம் அல்லது மறுக்கலாம் என்ற நிலையா ? அல்லது ஏதாவது கய்ட் லைன்ஸ், சட்ட திட்டங்கள் இருக்கின்றனவா என்பதை அரசு தெரிவிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பல்கலைக் கழகம்தான் முடிவு செய்கிறது, எந்த எந்தக் கல்லூரிக்கு அனுமதி தரலாம் என்று. நாம் கேட்டவுடனே, பல்கலைக் கழகம் ஒரு கமிஷனை அனுப்பி, இட வசதி இருக்கிறதா, ஆசிரியர்கள் இருக்கிறார்களா, மற்ற வசதிகள் இருக்கின்றனவா என்று பார்த்து அனுமதி அளிக்கிறார்கள். அந்த வகையிலே தான் மாநிலக் கல்லூரி முதல்வர் அவர்களுக்கு இந்த வகுப்புகளை ஆரம்பிக்க வேண்டுமென்று எழுதினோம். அதற்கு அவர்கள் இட வசதி இல்லையென்று தெரிவித்துவிட்டார்கள். வேறு கல்லூரிகளிலே இந்த வகுப்புகளை ஆரம்பிப்பதைப் பொறுத்த வரையில், பல்கலைக் கழகம் இட வசதியைப் பார்த்து முடிவு செய்கிறது.

திரு. கோ. இளங்கோவன் : வசதி வாய்ப்புள்ள இடங்களில் பல்கலைக் கழகம் முயற்சிக்கும், கல்லூரிக் கல்வி இயக்குநர் முயற்சி செய்வார் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இட வசதியுள்ள அரசுக் கல்லூரிகளில் இவ் வகுப்புகளை ஆரம்பிக்க, அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசுக் கல்லூரிகளாக இருந்தாலும், பல்கலைக் கழகத்திடம் அனுமதி பெறவேண்டும். வசதியுள்ள இடங்களில் ஆரம்பிக்க வேண்டுமென்று, கல்லூரிக் கல்வி இயக்குநருக்குச் சொல்லியிருக்கிறோம். இந்த வகுப்புகளிலே படித்து வெளியேறுவோர்களுக்கு ஓரளவுக்கு வேலை வாய்ப்புக்கிடைக்கிறது என்ற எண்ணம் இருக்கிற காரணத்தினால், இந்த வகுப்புகளை ஆரம்பிக்க இட வசதி பெற முயற்சி செய்யுமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அவர்கள் அந்த வகுப்புகளைப் பல கல்லூரிகளிலே ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையைப் பல்கலைக் கழகத்திற்திற்கு அனுப்பி இருக்கிறார்கள்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மாநிலக் கல்லூரியில் போதிய கட்டடம் கட்டுகின்ற வரையில் காத்திருக்காமல், பி. ஏ. பட்டப் படிப்புகள், எம். ஏ. பட்டப் படிப்புகளுக்கு உள்ள இடங்களைக் குறைத்து, உடனடியாக, பி. காம்., எம். காம்., சொல்லிக் கொடுக்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதையும் பல்கலைக் கழகம்தான் முடிவு செய்யவேண்டும்.

*வினா 273 : திரு. வீ. மலைக்கண்ணன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தய்வுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்த மாலை நேரக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் பி. காம்., பட்டம் பெற்ற மாணவர்களை அனுமதிப்பதுகுறித்துப் பல்கலைக்கழகத்திற்குப் பரிந்துரை ஏதேனும் செய்துள்ளதா ?